பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
08 08 2026 SATURDAY 7 15 AM
ஆகாஷ்வாணி - செய்திகள்

**தலைப்புச் செய்திகள்**

1. சர்வதேச கடல் வழிகளில் பாதுகாப்பான மற்றும் தடையற்ற போக்குவரத்து இருக்க வேண்டும் என்று இந்தியா மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

2. ரயில் பயணிகளுக்கு தரமான உணவு வழங்குவதை ரயில்வே உறுதிப்படுத்தியுள்ளதாக அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

3. இந்தியாவில் புத்தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை 2 லட்சத்து 40 ஆயிரமாக அதிகரித்துள்ளது என்று மத்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

4. அஸ்ஸாம் மாநிலத்தில் மழை மற்றும் வெள்ளம் காரணமாக உயிரிழந்தோர் எண்ணிக்கை 98ஆக அதிகரித்துள்ளது.

5. கொரிய மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு அரையிறுதியாட்டத்தில் இந்தியாவின் Ashmita Chaliha - Rakshitha Ramraj-ஐ எதிர்கொள்கிறார்.

>>>>>><<<<<<

சர்வதேச கடல் வழிகளில் பாதுகாப்பான மற்றும் தடையற்ற போக்குவரத்து இருக்க வேண்டும் என்று இந்தியா மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

புதுதில்லியில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் திரு. ரன்தீர் ஜெய்ஸ்வால், இந்திய கப்பல்கள் மற்றும்

மாலுமிகளின் பாதுகாப்புக்கு மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்து வருவதாக தெரிவித்தார்.

வளைகுடா நாடுகளில் உள்ள அனைத்து இந்திய தூதரக அலுவலகங்கள், கப்பல் போக்குவரத்து அமைச்சகம், வளைகுடா நாடுகளின் கடல்சார் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு இந்திய மாலுமிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்திய மாலுமிகளுக்கு உதவ 24 மணி நேரமும் செயல்படும் உதவி மையங்கள் செயல்பட்டு வருவதாகவும் திரு. ரன்தீர் ஜெய்ஸ்வால் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

ரயில் பயணிகளுக்கு தரமான உணவு வழங்குவதை ரயில்வே உறுதிப்படுத்தியுள்ளதாக அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் கேள்வி நேரத்தின் போது இதனை தெரிவித்த அவர், ரயில் பயணத்தின் போது வழங்கப்படும் உணவின் தரம் குறித்து, குறைவான புகார்களே வருவதாக கூறினார்.

உணவுப் பாதுகாப்பு விதிகளை மீறியதாக கடந்த 3 ஆண்டுகளில் ஐ.ஆர்.சி.டி.சி சார்பில் 5 கோடியே 13 லட்சம் ரூபாய் அபராதம் வசூலிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

உணவு பாதுகாப்பு விதிகளை மீறிய நிறுவனங்களின் ஒப்பந்தங்கள் ரத்து செய்யப்பட்டதாகவும் அமைச்சர் கூறினார்.

ரயில் பயணிகளுக்கு வழங்கப்படும் உணவு தரமான சமையல் கூடங்களில் தயார் செய்யப்படுவதை ரயில்வே உறுதிப்படுதியுள்ளதாகவும் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

தேசிய நகர்ப்புற கூட்டுறவு நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் புதிய அலுவலகத்தை மத்திய கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. அமித் □ா, மும்பையில் இன்று திறந்து வைக்கிறார்.

இந்த நிகழ்ச்சியின் போது, மஹாராஷ்ட்டிர மாநில நகர்ப்புற கூட்டுறவு நிர்வாகிகள் மற்றும் மாவட்ட கூட்டுறவு சங்க பிரதிநிதிகளுடன் அவர் கலந்துரையாடுகிறார்.

இந்த நிகழ்ச்சியின் போது, தேசிய தடய அறிவியல் பல்கலைக் கழகம், தேசிய நகர்ப்புற கூட்டுறவு நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்திற்கு இடையே அமைச்சர் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகவுள்ளது.

கூட்டுறவு வங்கித் துறையில், இணைய பாதுகாப்பு, தொழில்நுட்பத் திறனை மேம்படுத்த இந்த ஒப்பந்தம் உதவும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

இந்தியாவில் புத்தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை 2 லட்சத்து 40 ஆயிரமாக அதிகரித்துள்ளது என்று மத்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

புதுதில்லியில் நேற்று நடைபெற்ற சர்வதேச நிதி தொழில்நுட்ப திருவிழாவில் பேசிய அவர், அனைவருக்கும் வங்கிக் கணக்கு போன்ற

தொலைநோக்கு திட்டங்கள் மூலம், நிதி அதிகாரம் அளித்தலில் நாடு முன்னேறியுள்ளதாக தெரிவித்தார்.

செயற்கை நுண்ணறிவு, *Quantum* தொழில்நுட்பம், இணைய பாதுகாப்பு ஆகியவை நிதி தொழில்நுட்பத்துறையின் அடுத்தகட்ட வளர்ச்சியை தீர்மானிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

விண்வெளி, அணுசக்தி உள்ளிட்ட துறைகளில் தனியார் பங்களிப்பை அரசு அனுமதித்ததன் விளைவாக, விண்வெளித் துறையில் நாடு பெரும் வளர்ச்சியடைந்துள்ளது என்றும் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறினார்.

>>>>>><<<<<<

ஜார்க்கண்ட் மாநிலத்தில் அரசு பணியாளர் தேர்வாணையம் உள்ளிட்ட பல தேர்வுகளில் வினாத்தாள் முன்கூட்டியே வெளியானது மற்றும் தேர்வு முறைகேடு தொடர்பாக சிபிசிஐடி விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று பிஜேபி கூறியுள்ளது.

தில்லியில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அக்கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான திரு. *Nishikant Dubey*, மாணவர்களின் எதிர்காலத்தை பாதிக்கக்கூடிய நிர்வாக தவறுகள் மீண்டும் நிகழாமல் இருக்க அதிகாரிகள் பொறுப்பேற்க வேண்டும் என்று தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இப்பிரச்சினை எழுப்பப்படும் என்றும் அவர் கூறினார்.

இந்நிலையில், இந்த கோரிக்கையை வலியுறுத்தி, ஜார்க்கண்ட் தலைநகர் ராஞ்சியில் போராட்டம் நடத்திய மாணவர்களுடன்

பேச்சுவார்த்தை நடத்த அரசு தயாராக உள்ளதாக அம்மாநில முதலமைச்சர் திரு. ஹேமந்த் சோரன் தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<

பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு கஷ்மீரில் போராட்டங்களின் போது, உயரிழந்தவர்கள் குறித்து முறையான மற்றும் நடுநிலையான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கைக்கு ஐ.நா பொதுச்செயலாளர் திரு. அன்டோனியோ குட்டரஸ் ஆதரவு தெரிவித்துள்ளார்.

அமைதியான முறையில் போராடியவர்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட வன்முறைகள் ஏற்கத்தக்கதல்ல என்றும் அவர் கூறியுள்ளார்.

உள்ளூர் சட்டமன்ற தேர்தலில் வெளியாட்களுக்கு இடஒதுக்கீடு செய்யும் பாகிஸ்தான் அரசின் முடிவை எதிர்த்து, பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு கஷ்மீர் பகுதியில் கடந்த வாரம் போராட்டங்கள் நடைபெற்றன.

>>>>>><<<<<<

இந்தியாவில் மருத்துவ உபகரணங்கள் சந்தை மதிப்பு, 2047ஆம் ஆண்டுக்குள் 250 பில்லியன் டாலராக அதிகரிக்கும் என்று இந்திய தொழில் வர்த்தக சம்மேளனம் தெரிவித்துள்ளது.

தொடர்ந்து இந்த சந்தை வளர்ச்சி அடைந்து வருவதாகவும், தற்போது 14 பில்லியன் டாலராக உள்ளது என்றும் அந்த அமைப்பின் அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிகரித்து வரும் சுகாதார தேவைகள், மேம்பட்ட மருத்துவ தொழில்நுட்பங்களின் பயன்பாடு, உள்நாட்டு உற்பத்திக்கான அரசின் ஆதரவு ஆகியவை விரைவான வளர்ச்சிக்கு உந்துசக்தியாக உள்ளதாக இந்திய தொழில் வர்த்தக சம்மேளனம் கூறியுள்ளது.

>>>>>><<<<<<

தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, திரிபுரா மாநிலத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளதாக அந்த மாநிலத் தலைமைத் தேர்தல் அதிகாரி திரு. Brijesh Pandey அறிவித்துள்ளார்.

அகர்தலாவில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், வீடு வீடாகச் சென்று வாக்காளர்களைச் சரிபார்க்கும் பணி செப்டம்பர் 15 முதல் அக்டோபர் 14 வரை நடைபெறும் என்றும் அவர் கூறினார்.

வரைவு வாக்காளர் பட்டியல் அக்டோபர் 21 அன்று வெளியிடப்படும் என்றும் இறுதி வாக்காளர் பட்டியல் டிசம்பர் மாதம் வெளியிடப்படும் என்றும் திரு. Brijesh Pandey தெரிவித்தார்

>>>>>><<<<<<

கேந்திரிய வித்யாலயா, நவோதயா வித்யாலயா மற்றும் ஏகலைவா உண்டு உறைவிடப் பள்ளிகளில் இரண்டாம் கட்ட மாணவர் சேர்க்கைக்கு நடத்தப்பட்ட தேர்வு முடிவுகள் விரைவில் வெளியிடப்படும் என்று CBSE அறிவித்துள்ளது.

இம்மாதத்தின் 3வது வாரத்திலிருந்து படிப்படியாக இந்த முடிவுகள் வெளியிடப்படும் என்று சமூகவலைதளத்தில் தெரிவித்துள்ளது.

தேர்வு எழுதியவர்கள் வதந்திகளையும், உறுதிப்படுத்தப்படாத தகவல்களையும் தவிர்க்குமாறும், அதிகாரப்பூர்வ வலைதளத்தில் மட்டுமே தேர்வு முடிவுகளை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு CBSE கேட்டுக் கொண்டுள்ளது.

>>>>>><<<<<<

*அஸ்ஸாம் மாநிலத்தில் மழை மற்றும் வெள்ளம் காரணமாக உயிரிழந்தோர் எண்ணிக்கை 98ஆக அதிகரித்துள்ளது.*

*சிவசாகர், நாகோன், சோனிப்பூர், லக்கிபூர், ஜோர்ஹாட் உள்ளிட்ட 13 மாவட்டங்கள் வெள்ளத்தால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.*

*இதில் கோலாகாட் மாவட்டம் மிக கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.*

*அங்கு 59 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 10 ஆயிரம் பேர் நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.*

*வெள்ளத்தால் 10 ஆயிரத்து 700 ஹெக்டேரில் பயிரிடப்பட்டிருந்த பயிர்கள் நீரில் மூழ்கியுள்ளன.*

*சாலைகள் மற்றும் பாலங்களும் சேதமடைந்துள்ளதாக மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம் தெரிவித்துள்ளது.*

>>>>>><<<<<<

*கேரள மாநிலத்தில் அனைத்து மாவட்டங்களிலும் இன்றும் கன மழை தொடரும் என்று வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.*

*இதன் ஒரு பகுதியாக, காசர்கோடு, கண்ணூர், வயநாடு, கோழிக்கோடு, கோட்டயம், ஆலப்புழா மற்றும் பத்தனம்திட்டா ஆகிய ஏழு மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*இதனிடையே, அம்மாநிலத்தின் பிற மாவட்டங்களிலும் 'மழை பெய்து வருகிறது.*

கடலோரப் பகுதிகளிலும் லட்சத்தீவுப் பகுதிகளிலும் மணிக்கு 50 கிலோமீட்டர் வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

கொரிய மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு அரையிறுதியாட்டத்தில் இந்தியாவின் Ashmita Chaliha - Rakshitha Ramraj-ஐ எதிர்கொள்கிறார்.

இப்போட்டி இன்று காலை மணி 11.30-க்கு நடைபெறவுள்ளது.

>>>>>><<<<<<

தமிழ்நாடு ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில், நெல்லை அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் திண்டுக்கல் அணியை வென்றது.

முதலில் விளையாடிய திண்டுக்கல் நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 7 விக்கெட் இழப்புக்கு 170 ரன் எடுத்தது.

171 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் விளையாடிய நெல்லை அணி 17 புள்ளி 4 ஓவரில் 4 விக்கெட் இழப்புக்கு 172 ரன் எடுத்து வெற்றிபெற்றது.

முன்னதாக நடைபெற்ற சேப்பாக் அணிக்கு எதிரான ஆட்டத்தில் திருப்பூர் அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

முதலில் விளையாடிய சேப்பாக் அணி, 20 ஓவரில் 8 விக்கெட் இழப்புக்கு 205 ரன் எடுத்தது.

*206 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் விளையாடிய திருப்பூர் அணி 18 ஓவரில் 3 விக்கெட் இழப்புக்கு, இலக்கை எட்டி வெற்றிபெற்றது.*

*>>>>>><<<<<<*

*தமிழ்நாடு ஹாக்கி லீக் போட்டி, சென்னையில் நாளை முதல் வரும் 12ஆம் தேதி வரை நடைபெறவுள்ளது.*

*தெற்கு ரயில்வே, ஐசிஎஃப், இந்தியன் வங்கி உள்ளிட்ட 12 அணிகள் இப்போட்டியில் பங்கேற்கின்றன.*

*>>>>>><<<<<<*

*லடாக்கில் நடைபெற்ற ஐஸ் ஹாக்கி போட்டியில் இந்திய ராணுவ அணி பட்டம் வென்றது.*

*>>>>>>END<<<<<<*